**கொழும்பு மாநகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2017 ஒக்டோபர் 23 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 யூன் 06 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டினது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 டிசெம்பர் 18 ஆந் திகதி மாநகர ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுமிருந்தது.

### 1.2 சாதகமற்ற அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களது முக்கியத்துவம் காரணமாக 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கொழும்பு மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அநேக ஆண்டுகளாக நிலவி வரும் திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பாகிய ரூபா 477,218,614 வருவாயிலிடப்படுகையில் மிகை மற்றும் பற்றாக்குறைக் கணக்கில் செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக ஆண்டினது வருவாயாகக் கணக்கிலிடப்பட்டமையால் ஆண்டிற்கான வருவாய் அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மாநகர சபை பெறும் சகல பணமும் மாநகர சபை நிதியம் எனும் பெயரிலான கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டுமாயினும், பல்வேறு நன்கொடையாளர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 32,746,905 கொழும்பு நகர அபிவிருத்தி நிதியத்தில் செலவு வைக்கப்பட்டு நகர அபிவிருத்தி நிதியம் எனும் பெயரிலான நிலையான வைப்புக் கணக்கில் ரூபா 25,368,547 முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 6,273,800 ஆகியபோதும், கடன் கொடுத்தோரின் கீழ் கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகையாக ரூபா 4,538,800 காட்டப்பட்டமையால் கடன் கொடுத்தோர் ரூபா 1,735,000 குறைவாகக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2016 ஆம் ஆண்டினது சொத்துக் கடன் வட்டி வருவாய் ரூபா 12,141,968 ஆகியபோதும், வருமான, செலவினக் கணக்கில் ரூபா 13,277,300 ஆகப் பதிவு செய்யப்பட்டமையால் சொத்துக் கடன் வட்டி வருவாய் ரூபா 1,135,332 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான சம்பள மீளளிப்பு ரூபா 2,862,420,446 ஆகியபோதும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,868,534,283 எனக் கணக்கிலிடப்பட்டமையால் சம்பள மீளளிப்பு வருவாய் ரூபா 6,113,837 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. 2016

உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து கிடைக்கப்பெற்ற சம்பள மீளளிப்பு தொகை பதிவேட்டில் தவறாகப் பதிவு செய்யப்பட்டதால் 2015 மற்றும் 2016 டிசெம்பர் என்பவற்றிற்கான திருத்தத்திற்குள்ளான கணக்குகளில் 67 ஆம் 68 ஆம் நாட் குறிப்புகளின் மூலம் ரூபா 238,535,037 வீதப்படி வரவு வைக்கப்பட்டும் செலவு வைக்கப்பட்டும் இருந்ததால் மிகை மற்றும் பற்றாக்குறைக் கணக்கும் நானாவித கடன்பட்டோர் கணக்கும் அதேயளவு தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) பொது நீர்க் கம்பங்கள் 08 மற்றும் 06 குளியலறைகள் என்பவற்றிற்கு 07 செலவின விடயங்களின் மூலம் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபைக்கு 2008 சனவரி 01 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டிய மொத்த நிலுவை ரூபா 12,262,178 ஆகும். எவ்வாறாயினும், இதற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு அல்லது கடன் கொடுத்தோர் நிதியேற்பாட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

(எ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு களஞ்சியம் சமர்ப்பித்திருந்த கையிருப்புச் சரி, பிழை பார்த்தல் அறிக்கையில் காணப்படும் கையிருப்பு மீதியை விட ரூபா 1,705,095 அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) 2016 ஆம் ஆண்டிற்குரிய வாடகைக் கொள்வனவு கடைகளின் மூலமான வருவாய் ரூபா 20,013,054 ஆகும். எவ்வாறாயினும், அப்பெறுமதி ரூபா 8,576,406 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டமையால் வாடகைக் கொள்வனவு கடைகளின் வருவாய் ரூபா 11,436,648 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ) நிதிக்கூற்றுக்களில் 56 கணக்கீட்டு விடயங்களது பெறுமதி ரூபா 18,607,853,016 ஆகக் காட்டப்பட்டிருந்தபோதும், அவற்றுடன் தொடர்புடைய உப பதிவேடுகளில் அப்பெறுமதி ரூபா 11,309,047,875 ஆகக் காட்டப்பட்டமையால் ரூபா 7,298,805,141 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கிய பின்வரும் கையில் உள்ள காசு மற்றும் வங்கி கணக்கு மீதி என்பன சிறாப்பர் பிரிவின் காசேட்டின் பிரகாரம் இனங்காதிருந்தன. விபரம் வருமாறு.

**(i) கையில் உள்ள காசு**

| பரம் | நிதிக்கூற்றின் பிரகாரமான பெறுமதி | சிறாப்பர் பிரிவின் காசேட்டின் பிரகாரமான பெறுமதி | கணனி முறைமைப் பிரகாரமான பெறுமதி |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. |
| கையில் உள்ள காசோலைகள் | 1,013,906,939 | 1,262,903,276 | 1,245,881,545 |
| வங்கியில் உள்ள காசு | 1,371,662 | 18,176,905 | 1,371,662 |

**(ii) வங்கிக் கணக்கு மீதி**

2016.12.31 இல் உள்ளவாறான 04 வங்கிக் கணக்குகளது இறுதிக் கணக்குகளில் காணப்படும் காசேட்டு மீதிக்கும் வங்கி கணக்கிணக்கக் கூற்றில் காணப்படும் காசேட்டு மீதிக்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பதினாறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நிலவிவரும் 18 பெற வேண்டிய கணக்கு மீதிகளாகிய ரூபா 64,247,278 தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) அநேக ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டவாறிருக்கும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சில்லறைக் காசு மற்றும் விசேட முற்பணக் கணக்கு மீதி ரூபா 3,911,402 ஆகும்.

(இ) உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட வரியாகிய ரூபா 17,974,658 உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்படாது கொடுப்பனவு செய்ய வேண்டிய வைப்புக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

(அ) பத்துக் கணக்கீட்டு விடயங்களுக்குரிய ரூபா 14,539,311,239 கூட்டுத் தொகைக்குரிய சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் திருத்தஞ் செய்யப்பட்டதன் பின்னர் 2017 ஒக்டோபர் 23 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 09 வருமான விடயங்களும், 08 செலவின விடயங்களும், 17 சொத்துக்களுக்கான விடயங்களும், ஒரு பொறுப்பிற்கான விடயமும் முறையே ரூபா 235,027,401, ரூபா 60,799,546, ரூபா 535,851,001, ரூபா 11,436,640 என்பவற்றால் திருத்தஞ் செய்யப்பட்டிருந்தன. அத்திருத்தங்களுக்கான நாட் குறிப்பு உறுதிச் சான்றுகளும் அவற்றுடன் தொடர்புடைய உப ஆவணங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**(இ) பதில் கிடைக்கப்பெறாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

2016 ஆம் ஆண்டின் பொருட்டு 2017 யூலை 30 வரை வழங்கிய 42 கணக்காய்வு ஐய வினாக்களில் தீர்த்து வைக்கப்படாதிருந்த கணக்காய்வு ஐய வினாக்களது பெறுமதி ரூபா 1,354,114,060 ஆகும். பதில் கிடைக்கப்பெற்றிராத கணக்காய்வு ஐய வினாக்களது எண்ணிக்கை 24 ஆகும்.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

**(அ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் (252 ஆம் அத்தியாயம்)**

(i) நிதி சம்பந்தமான நிலையியற் குழுவினால் கருத்திற் கொள்ளப்பட்டு பொதுச் சபைக்கு அறிக்கையிடும் வரை மாநகர சபை ஒன்று நிதி தொடர்பாக எந்த விடயத்திலும் இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளலாகாது என 28 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டிருந்தும் அதற்கு முரணாக பாசிக்குடாவில் நடைபெற்ற வதிவிட செயலமர்வுக்கு சபையின்

அங்கீகாரத்தைப் பின்னர் பெறும் விதத்தில் ரூபா 3,569,375 செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) உள்ளூராட்சி மற்றும் வீடமைப்பு அமைச்சரால் வெளியிடப்பட்ட 1988 பெப்ரவரி 19 ஆந் திகதிய 494 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தீர்வை வரியை சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னரோ அல்லது அத்தினத்திலோ செலுத்துபவர்களுக்கு 10 சதவீத கழிவும் தவணை முறையில் செலுத்துபவர்களுக்கு முதலாவது மாதத்திற்குள் 5 சதவீத கழிவும் உரித்தாகும் என 230(4) ஆம் பிரிவின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய, தீர்வை வரி செலுத்துபவர்களுக்கு 10 சதவீத மற்றும் 5 சதவீத கழிவுகளைப் பெறும் அருகதை உள்ளபோதும், முன்னைய ஆண்டினது நிலுவை செலுத்தப்படாதிருக்க நடப்பாண்டிற்கான கொடுப்பனவுகளில் கழிவு வழங்கப்பட்டிருந்தது. மேற்படி வர்த்தமானி அறிவித்தலுக்கு முரணாக நிலுவை மீதிகளைக் கொண்டிருந்த 109 சொத்துக்களின் பொருட்டு ரூபா 248,558,166 கழிவு வழங்கப்பட்டிருந்தமை தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்டது.

(iii) வர்த்தக வரிகளுக்குரிய வர்த்தகத்தை இனங்காணுதல், வர்த்தகத்தை வகைப்படுத்தல், வரி விதிப்பதற்கான மூல நடவடிக்கைகளைத் தயாரித்தல், வரி செலுத்துவதைப் புறக்கணிப்போருக்கு எதிராக சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பன 247 ஆம் பிரிவின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாமையால் அநேக ஆண்டுகளாக மாநகர சபை குறிப்பிடத்தக்க வருவாயை இழந்திருந்தது.

(iv) மாநகர சபை அறவிட வேண்டிய ஏதாவது வரி, தண்டப்பணம், குற்றப்பணம், தண்டனையாக வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவு, அறவிடப்பட வேண்டியிருக்குமிடத்து அதனை அறவிட்டு மாநகரசபை நிதியத்தில் செலவு வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பது மாநகர ஆணையாளரின் பணியாகும் என 254 அ(1) மற்றும் (2) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டிருந்தபோதும் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவையான ரூபா 3,586,549,919 அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கொழும்பு மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் VIII ஆம் அத்தியாயச் துணைச்சட்டம் 34 ஆம் பந்தி**

---

(i) வர்த்தக கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான வருமான நிலுவை 2016 யூன் 30 ஆந் திகதியளவில் ரூபா 27,293,400 ஆகவிருந்தது. உப சட்ட அத்தியாயம் XXV இன் பிரகாரம் அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ii) வர்த்தக கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான கட்டணத்தை அறவிடுவதற்குச் சபை வெளியிட்ட வருடாந்த அறிவித்தல் இலக்கம் 4 ஆகும். இவற்றை வழங்குவதற்கு 2016 ஒக்டோபர் 11 வரை மாவட்ட அலுவலகங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்**

---

(i) நி.பி 395(இ) – ஒவ்வொரு மாத முடிவிலுமான கொடுக்கல் வாங்கல்களது நிலைமை தொடர்பாக அடுத்து வரும் 15 ஆந் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கு தயாரிக்கப்பட வேண்டுமாயினும், வங்கி கணக்குக் கூற்றைத்

தயாரிப்பதில் 40 முதல் 290 நாட்கள் வரையிலான தாமதம் நிலவியமை தெரிய வந்தது.

(ii) தீயணைப்புச் சேவைகள் திணைக்களம் நி.பி 751 இன் பிரகாரம் கையிருப்புப் பெறுவனவுகளதும் வழங்கல்களதும் அறிக்கைகள் எதனையும் பேணாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. போம் இயந்திரங்களது பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மைலோ மீட்டர் செயற்படாதிருந்தபோதும், 4 மாவட்ட அலுவலகங்களின் 32 வாகனங்கள் நி.பி 1653 இல் குறிப்பிட்டதற்கு முரணாகப் பயன்படுததப்பட்டிருந்தன.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் தாபன விதிக்கோவையினது XIX அத்தியாயத்தின் பிரகாரம் வீடுகள் வகைப்படுத்தப்பட்டு அதற்கமைய விண்ணப்பதாரர்களது பெயர்களை எதிர்பார்த்திருப்போரது பதிவேட்டில் பதிவு செய்து வரிசைக் கிரமத்தின் பிரகாரம் அவற்றை வழங்க வேண்டுமாயினும், மாநகர சபை அதற்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(உ) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.8.1 (அ) பிரிவுக்கு முரணாக திண்மக் கழிவுச் சுத்திகரிப்புப் பிரிவின் அவசர தேவைகளுக்கான கொள்வனவின் கீழ் 06 டிப்பர் வாகனங்களைத் தனியார் கம்பனி ஒன்றிலிருந்து வாடகைக்குப் பெற்று 2015 யூன் முதல் 2017 மே 12 வரை ரூபா 59,628,833 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) 1999 ஒக்டோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனங்களைப் பெறுவதற்கு உரித்தற்ற உத்தியோகத்தர்கள் வாகனங்களையும் அதற்கான எரிபொருளையும் பெறுவதற்கு இயலுமாக இருந்தால் மாத்திரமே தொகுதி ரீதியிலமைந்த போக்குவரத்து வசதிகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் ஒவ்வொரு வாகனமென போக்குவரத்து வசதி வழங்கப்பட்டிருந்தது.

(எ) 1988 செப்டெம்பர் 20 ஆந் திகதிய 08 ஆம் நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சுற்றறிக்கையின் பிரகாரம், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பொருட்டுப் பேணப்படும் வங்கிக் கணக்கில் மீளாய்வாண்டு முடிவிலான ரூபா 689,014,313 மீதியானது நெடுங்காலமாகப் பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஏ) 2008 பெப்ரவரி 21 ஆந் திகதிய 1534/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதிப்பத்திரமின்றிக் கழிவுப் பொருட்களைக் கொண்டு செல்லல் ஆகாதெனினும், டிப்பர் வாகனங்களை வாடகைக்கு பெறும்போது குறித்த நிறுவனம் அவ்வாறான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ளதா என்பதை கேள்வி ஒப்படைக்கப்படுவதற்கு முன்னர் மாநகர சபை பரிசீலனை செய்யப்படவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினது மாநகர சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 4,042,313,090 ஆகும். இதற்கு நேரெதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருவாயிலும் கூடிய செலவினம் ரூபா 569,949,762 ஆகும். அதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிப்பேறுபேற்றில் ரூபா 4,612,262,852 அதிகரிப்பு தென்பட்டது. மீளாய்வாண்டினது மொத்த மீண்டு வரும்

வருவாய் ரூபா 5,004,505,835 அதிகரித்துள்ளமை நிதிப் பெறுபேற்று அதிகரிப்புக்கான முக்கிய காரணியாக அமைந்தது.

## 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் மீண்டெழும் வருவாய் 76 சதவீத அதிகரிப்பாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கட்டணங்களும் அறவீடுகளும் 987 சதவீத அதிகரிப்புக்குள்ளானமையே அதற்கான காரணமாகும். முன்னைய பல ஆண்டுகளாக திருப்பிச் செலுத்த வேண்டியிருந்த வைப்பு மீதியான ரூபா 477.2 மில்லியன் வருவாயில் சேர்த்துக் கொள்ளப்பட்டதும் முத்திரைத் தீர்வை கட்டணங்கள், முத்திரைத் தீர்வை, கட்டணங்கள் என்பன அறவீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டதுமே கட்டணங்களும் அறவீடுகளும் இவ்வாறாக அதிகரிக்கக் காரணமாக அமைந்தன.

(ஆ) தீர்வையும் வரியும் 27 சதவீதத்தாலும் வாடகை வருவாய் 3 சதவீதத்தாலும் வட்டி வருவாய் 12 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தன.

(இ) வாடகைக் கொள்வனவுக் கடை வருவாய் பெறுவனாகிய ரூபா 8 மில்லியன் மற்றும் செயற்திட்ட உதிவியின் கீழ் ஜப்பானிய அரசாங்கத்திடமிருந்து பெற்ற ரூா 34 மில்லியன் பெறுமதியுடைய 12 திண்மக் கழிவுப்பொருள் லொறிகளும் மூலதனப் பெறுவனவாக உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின்போது மூலதன நிதியளிப்புக் கிரயமாக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடனுக்கான ரூபா 60.6 மில்லியன் வட்டி செலுத்தப்பட்டதால் நிதியளிப்புக் கிரயம் முன்னைய ஆண்டை விட 245 சதவீத அதிகரிப்புக்குள்ளாகியது.

(உ) மீளாய்வாண்டின்போது தாபன மற்றும் நானாவித செலவினம் முன்னைய ஆண்டைவிட 51.6 சதவீதம் அதிகரித்திருந்தது. திண்மக் கழிவுப்பொருட்களைச் சேகரித்து வெளியேற்றுவதற்கு ரூபா 1294 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது முன்னைய ஆண்டை விட 62 சதவீத அதிகரிப்பாகும்.

(ஊ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிகர சொத்து அதிகரிப்பு ரூபா 3,146,961,642 ஆகும். நடைபெறும் வேலையாக நடப்பாண்டில் இனங்காணப்பட்டிருந்த ரூபா 349,129,555, கடன் கொடுத்தோர் ரூபா 684,123,615 குறைவடைந்தமை, கையில் உள்ள காசோலைகளது பெறுமதி ரூபா 916,484,421 அதிகரிப்புக்குள்ளானமை என்பன அதற்கான காரணிகளாகும்.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 தீர்வையும் வரியும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு முடிவிலான மொத்தத் தீர்வை வரி நிலுவை ரூபா 2,593,828,007 ஆகும். அம்மொத்தத் தீர்வை வரி நிலுவையில் ரூபா 500,000 க்கு மேற்பட்ட தீர்வை வரி நிலுவையைக் கொண்ட 650 சொத்துக்கள் இருந்ததுடன், அத் தீர்வை வரியினது பெறுமதி ரூபா 1,348,595,164 ஆகவுமிருந்தது. அது மொத்த நிலுவையின் 52 சதவீதமாகும்.

(ஆ) வருடாந்த தீர்வைவரிப் பெறுமதியாகிய ரூபா 1,000,000 ஐக் கொண்டிருந்த சொத்துக்களது எண்ணிக்கை 297 ஆகும். அதில் 2016 டிசெம்பர் 31 இல்

உள்ளவாறான நிலுவை ரூபா 1,100,665,942 ஆகும். அந் நிலுவையின் 42 சதவீதம் ஆகும்.

(இ) கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள அரசாங்க சொத்துக்களில் 182 சொத்துக்களது வரி நிலுவை ரூபா 517,110,341 ஆகும். இது மொத்த நிலுவையின் 20 சதவீதம் ஆகும்.

(ஈ) 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 500,000 க்கு மேற்பட்ட நிலுவை மீதிகளை உடைய சொத்துக்களிலிருந்து தீர்வை வரி எதுவுமே அறவிடப்படாத 496 சொத்துக்கள் இருந்ததுடன் அம் மொத்த நிலுவை ரூபா 967,015,990 ஆகவுமிருந்தது.

(உ) ஏறக்குறைய கடந்த 05 வருடங்களாக தீர்வை வரி அறவிடப்படும் சதவீதம் 14.4 முதல் 29.5 வரையில் அமைந்திருந்தது. இதற்கமைய, நிலுவை அறவீடு நலிவான மட்டத்தில் இருந்தது.

(ஊ) முறைப்படி தீர்வை வரியைச் செலுத்துபவர்களுக்கும் அவ்வாறு செலுத்தாது விடுபவர்களுக்கும் சமமான விதத்தில் கழிவு வழங்கப்படுவதன் மூலம் முறைப்படி தீர்வை வரியைச் செலுத்துவோரது போக்கில் தாக்கம் விளைவதாக அமைவதுடன் மாநகர சபையில் தற்போதுள்ள தகவல் தொழில்நுட்பச் செயற்பாட்டு முறைமையில் (AS400) விலை மதிப்பு தொடர்பான விடயங்களைக் கொண்டதொரு துறை உள்ளடக்கப்பட்டிருந்த போதும், அத்துறையை நாளதுவரையாக்குவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.3.2 வர்த்தக வரியும் வியாபார வரியும்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டினது இறுதிக் கணக்குகளில் வர்த்தக மற்றும் வியாபார வரியாக காசு அடிப்படையில் ரூபா 26,221,470 காட்டப்பட்டிருந்தபோதும், அதில் முன்னைய ஆண்டு தொடர்பாகப் பெறப்பட்ட வருவாயின் பெரும் பகுதி உள்ளடக்கப்பட்டுமிருந்தது. 2016 ஆம் ஆண்டினது வர்த்தக மற்றும் வியாபார வரியாக ரூபா 67,796,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் 2016 ஆம் ஆண்டின்போது காசாக ரூபா 12,441,000 மாத்திரமே பெறப்பட்டுமிருந்தது. அதற்கமைய, கணக்கில் ரூபா 26,221,470 காட்டப்பட்டிருந்தபோதும், அதில் ரூபா 13,780,470 தொகையானது 2016 ஆம் ஆண்டைச் சாராதது ஆகும். ஆண்டிற்குரிய மொத்த வருவாயில் இறுதிக் கணக்குகளின் மூலம் தென்பட்ட தொகை 18 சதவீதம் மாத்திரமே.

(ஆ) மேல் மாகாண உள்ளூராட்சித் திணைக்களச் சுற்றறிக்கை இலக்கம் 39/96 இன் மூலம் ஒவ்வொரு ஆண்டிற்குமுரிய வரியை அவ்வாண்டின்போதே சேகரிப்பதற்கு நிர்வாகத் தலைவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், கொழும்பு மாநகர சபை வியாபார வரி தொடர்பாக அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. விபரம் வருமாறு.

(i) 2016 ஆம் ஆண்டிற்கான வர்த்தக வரிப் பொழிப்பின் பிரகாரம் மாநகரசபை பெற வேண்டிய வர்த்தக வரி வருவாய் ரூபா 67,796,000 ஆகும். எவ்வாறாயினும், உள்ளவாறு அறவிடப்பட்ட தொகை ரூபா 12,441,000 மாத்திரமே. இதன் காரணமாக, 2016 ஆம் ஆண்டினது வருவாய் நிலுவை ரூபா 55,385,000 ஆனதுடன் அது பெற வேண்டிய வருவாயில் 82 சதவீதமாகவும் அமைந்திருந்தது.

(ii) 2016 ஆம் ஆண்டின்போது கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான 18,823 நிலையங்களில் வர்த்தக வரி அறவிடப்பட வேண்டியுள்ளதாக

இனங்காணப்பட்டிருந்தது. அதில் ஆண்டின் இறுதியில் 3,033 வியாபார நிலையங்கள் மாத்திரமே வரியைச் செலுத்தியிருந்தன. அதற்கமைய, 2016 ஆம் ஆண்டின்போது 15,790 வியாபார நிலையங்களிலிருந்து வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மாநகர சபை 47 வர்த்தக வரிப் பிரிவுகளுக்கு வரிகளுக்கான இலக்கத்தை ஏற்படுத்தியிருந்தபோதும், 08 பிரிவுகளில் வரி அறவிடப்படும் முன்னேற்றம் 7.8 முதல் 13.7 சதவீதமான குறைந்த மட்டத்திலிருந்தது.

**2.3.3 சுற்றுலாச் சபையில் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்கள், உணவு விடுதிகள் மற்றும் தங்குமிடங்கள் என்பவற்றிலிருந்து பெறப்படும் வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம்**

2016 ஆம் ஆண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 132 நிறுவனங்கள் வர்த்தக அனுமதிப்பத்திரங்களைப் பெறவேண்டியுள்ளதாக இனங்காணப்பட்டிருந்தது. அதில் 107 நிறுவனங்களிலிருந்து ரூபா 45,091,444 அறவிடப்பட்டிருந்தது. 2 நிறுவனங்கள் மூடப்பட்டிருந்ததுடன் 25 நிறுவனங்கள் கொடுப்பனவுகளை மேற்கொண்டிருக்கவுமில்லை. இவ்வாறாகக் கொடுப்பனவைப் புறக்கணித்த நிலையங்களில் பல 2008 முதல் வரிக் கொடுப்பனவைப் புறக்கணித்தவையாகும். அவை குறிப்பிடத்தக்க வருவாயைப் பெறும் முதல் தர நிறுவனங்கள் என அவதானிக்கப்பட்டது. இவ்வாறு மாநகரசபை இழப்பிற்குள்ளான வருவாயை அறவிடுவதற்குத் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன், மாநகர சபை அந்நிறுவனங்களுக்கான தனது சேவைகளைத் தொடர்ந்தவாறுமிருந்தது.

**2.3.4 வாடகைக் கொள்வனவுக் கடை வருவாய்**

வருவாய்ப் பிரிவில் பேணப்படும் வாடகைக் கொள்வனவுக் கடை வருவாய் பதிவேட்டில் அநேக கடைகளது வாடகைக் கொள்வனவுக் கால வரம்பு குறித்துக் கொள்ளப்பட்டிராமையால், அப்பதிவேட்டுடன் வருவாய்ப் பெறுவனவு அறிக்கைகளை ஒப்பிட முடியாதிருந்தது. மேலும், வாடகைக் கொள்வனவுக் கடை வருவாய் பதிவேட்டில் வாடகைக் கொடுப்பனவு வரம்பு தொடர்பான குறிப்புகள் இல்லாத 5 சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

**2.3.5 வினோத வரி**

**(அ) கேளிக்கை நிகழ்ச்சிகள், சங்கீத நிகழ்ச்சி, விளையாட்டுப் போட்டிகளுக்கான வினோத வரி**

கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் 2016 ஆம் ஆண்டின்போது நடைபெற்ற கேளிக்கை நிகழ்ச்சிகள், சங்கீத நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளின்போது அறவிடப்பட்ட வினோத வரி ரூபா 84,235,644 ஆகும். உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்துடன், ரூபா 30,324,273 வினோத வரியிலிருந்து விலக்களிக்கப்படும்போது குறித்த நிகழ்ச்சிகள் / போட்டிகள் நடாத்தப்படுவதால் பெறப்படும் வருவாய் குறித்த மன்றத்தால் நடாத்தப்படும் சமுதாய உதவிகளுக்கு / பாடசாலைகளது அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படுவது மற்றும் அவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையை உறுதி செய்யும் நிகழ்வுகள் / போட்டிகள் முடிவடைந்த 30 நாட்களுக்குள் அமைப்பாளர்களால் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென விதித்துரைக்கப்பட்டுள்ளபோதும், அனுமதிச் சீட்டு விற்பனை மூலம் பெறப்படும் வருவாய் (60%) சமுதாய உதவிகளுக்கு / பாடசாலைகளது அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்பட்டதை உறுதி செய்யாது வினோத வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) சினிமாக் கொட்டகை வினோத வரி**

(i) கொழும்பு நகர எல்லைக்குள் இயங்கும் 24 சினிமாக் கொட்டகைகளது 2016 ஆம் ஆண்டிற்கான சினிமாக் கொட்டகை வினோத வரி ரூபா 63,770,318 ஆகும். இதில் ரூபா 17,166,725 மீளாய்வாண்டு முடிவில் அறவிடப்படாதிருந்தது. 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வினோத வரியினது திரண்ட நிலுவை ரூபா 33,060,432 ஆகும்.

(ii) வினோத வரி நிலுவையைக் குறிக்கும் கோவை மற்றும் சினிமாக் கொட்டகைக் கட்டண அறவீட்டுப் பதிவேடு என்பவற்றுடன் விடயத்திற்குப் பொறுப்பான எழுதுவினைஞரின் தகவல்களை ஒப்பிட்டுப் பார்க்கையில் 2016 ஆம் ஆண்டில் பட்டியலிடப்பட்ட வருவாயில் ரூபா 2,944,365 மற்றும் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை என்பவற்றுக்கிடையே ரூபா 10,022,778 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(iii) வினோத வரித் தொகையை அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் தீர்த்து வைக்க வேண்டுமென சினிமாக் கொட்டகைகளுக்குத் தெரிவிப்பது வருவாய் பரிசோதகர்களது கடமை ஆகும். எவ்வாறாயினும், தீர்த்து வைக்கப்படுவதில் 02 முதல் 12 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 25 சினிமாக் கொட்டகைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 23,037,654 நிலுவையாக இருந்தபோதிலும், 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வினோத வரிக் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் அறவீடுகளை மேற்கொள்வதற்குச் சட்டபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3.6 வர்த்தகக் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான கட்டணம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாவட்ட அலுவலகம் ஒன்றினது அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள வர்த்தக நிறுவனம், புதிய வர்த்தக நிறுவனம், வர்த்தகத்திலிருந்து நீங்கிய நிறுவனம் மற்றும் வியாபார நிறுவனம் என்பவை வெளியேற்றும் கழிவுப் பொருட்களது அளவு தொடர்பாக வருடாந்தம் கிரமமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படாமையால் நாளதுவரையாக்கப்படாத வர்த்தக, வியாபாரங்கள் தொடர்பான தகவல்களின் அடிப்படையில் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான கட்டணம் அறவிடப்பட்டவாறிருந்தது. வருவாயை அறவிடுவதற்கு முறையான விதிமுறைகளை அறிமுகஞ் செய்து வைப்பதற்குப் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டிற்கான கழிவுப் பொருள் அகற்றலுக்கான கட்டணங்கள் சம்பந்தமாக 03 மாவட்ட அலுவலகங்களில் நிலுவையாக இருந்த தொகை ரூபா 3,464,000 ஆகும். எவ்வாறாயினும், உள்ளவாறான அறவீடு ரூபா 1,401,000 ஆகையால் வர்த்தக கழிவுப் பொருள் வருவாயை அறவிடும் சதவீதம் 2016 ஒக்டோபர் 30 ஆந் திகதியளவில் 40 சதவீதமாகிய குறைந்த மட்டத்திலேயே இருந்தது. மேலும், வர்த்தகக் கழிவுப் பொருட்களை அகற்றுவது தொடர்பாக 2016 ஒக்டோபர் 30 ஆந் திகதியளவில் நிலுவையாக இருந்த வருவாய் ரூபா 4,571,700 ஆகும். துணைச்சட்ட அத்தியாயம் XXV இன் பிரகாரம் அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) ஆண்டின்போது வெளியிடப்படும் அறிவுறுத்தல்களுக்குப் பணம் செலுத்துவது தொடர்பான தகவல்களை சிறாப்பரது பிரிவில் மாதாந்தம் அல்லது காலாண்டுக்கு ஒருமுறை உப அலுவலகங்களில் பேணப்படும் வருவாய்ச் சேகரிப்பு பதிவேட்டில்

நாளதுவரையாக்கும் விதிமுறை இல்லாமையால் வருவாய் நிலுவை தொடர்பான சரியான தகவல்களைப் பெற முடியவில்லை.

(ஈ) மாநகரத் திறைசேரித் திணைக்களம் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் என்பவற்றுக்கிடையே முறையான தகவல் ஊடகத் தொடர்பு இல்லாமையால் மாநகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் ஆரம்பிக்கப்படும் புதிய வர்த்தக, வியாபாரங்கள் தொடர்பாக மாநகரசபை அனுமதிப்பத்திரங்களை வழங்கியதன் பின்னர் அவ்வர்த்தக, வியாபார நிலையங்களது தகவல்களைப் பெறுவதற்கான வாய்ப்பு நழுவியிருந்தது.

**2.3.7 முதலீட்டு வட்டி வருவாய்**

2016 சனவரி 01 ஆந் திகதியளவில் ரூபா 100,000,000 மற்றும் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 80,000,000 என்பன ஏழு நாள் வைப்பிலிடப்பட்டிருந்தன. இவை ஏறக்குறைய 3.5 சதவீதக் குறைந்த வட்டி வீதத்தில் முதலீடு செய்யப்பட்டிருந்தமையால், 2016 ஆம் ஆண்டில் வட்டி வருவாயாகப் பெறப்பட்ட தொகை ரூபா 3,452,055 ஆகும். இத்தொகை ஏழு நாள் வைப்பிலிடப்பட்டது குறுகிய கால தொழிற்படு மூலதனத் தேவைகளின் நிமித்தமே. ஆயினும், 2017 சனவரி 01 வரை இவை காசாக மாற்றப்படாதிருந்தன. அரச வங்கிகளில் அப்போது நிலவிய நிலையான வைப்பு வட்டி வீதம் 6.5 சதவீதம் என உறுதி செய்யப்பட்டதால் அதனோடு ஒப்பிடுகையில் குறைந்த பட்சம் ஏறக்குறைய ரூபா 3,000,000 வருவாயை மாநகர சபை இழந்திருந்தது.

**2.4 தண்டப்பணம்**

மாநகர சபைக்கு முன்னைய ஆண்டுகளில் என்னால் வழங்கப்பட்ட 05 தண்டப்பணச் சான்றிதழ்களின் மீது 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 357,979 அறவிடப்பட வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ வினைத் திறமையின்மை**

**3.1.1 கொழும்பு மாநகர சபைக்கான புதிய கட்டிடத்தை நிர்மாணித்தல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) குறித்த நிர்மாண வேலை 2016 சனவரி 31 ஆந் திகதி முடிவடைய வேண்டியபோதும், 2017 டிசெம்பர் 15 ஆந் திகதியளவிலும் வேலை முடிவடையாதிருந்தது.

(ஆ) 2016 சனவரி 31 ஆந் திகதியின் பின்னர் 2016 செப்டெம்பர் 14 வரை தாமதக் காலத்திற்குரிய தாமதக் கட்டணமாக ரூபா 75,509,312 அறவிடப்பட வேண்டியிருந்தது.

(இ) அளவுகளுக்கான பிரமாண பட்டியலுக்கும் உள்ளவாறு நடைபெற்ற நிர்மாண வேலையினது அளவுகளுக்குமிடையே 10 முதல் 893 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் நிலவியதால் மதிப்பீடு முறைப்படி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.1.2 பழைய நகர மண்டபக் கட்டிடத்தை புனரமைப்பதற்கான உசாத்துணைச் சேவையைப் பெறுதல்**

பின்வரும் வடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பழைய நகர மண்டபக் கட்டிடத்தைப் புனரமைக்கும் பணிக்கு நிச்சயிக்கப்பட்ட காலவரையறை இல்லாது போனமையால், இந்த ஒப்பந்தத்துடன் தொடர்புடைய

கூறு விலைப் பதிவேடுகள், பிரமாணப் பட்டியல், அமைப்புகளது அளவுடனான திட்டத்தைத் தயாரிப்பதற்கான பணிகளுக்கு மாத்திரம் ஏறக்குறைய 2 ஆண்டுகளும் அதாவது உசாத்துணைச் சேவையை பெறுவதற்கு மாநகரசபை தீர்மானம் மேற்கொண்ட தினத்திலிருந்து நெடுங்காலமும் கழிந்திருந்தது.

(ஆ) உசாத்துணைக் கம்பனிக்கு மொத்த நிர்மாண வேலைத் தொகையில் 8 சதவீதத்தைத் தொழில்சார் கட்டணமாக வழங்குவதற்கு ஒப்பந்தம் வழங்கப்படுகையில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தபோதும், அத்தருணத்தில் நிர்மாண வேலைகளது மதிப்பீடு முற்றாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2015 மே 06 ஆந் திகதி உசாத்துணை நிறுவனம் ஏறக்குறைய ரூபா 363 மில்லியன் கிரய மதிப்பீட்டைச் சமர்ப்பித்திருந்தபோதும், அந்த நிர்மாண வேலைக் கிரயம் நிச்சயமற்றதாகியதால் உசாத்துணைக் கட்டணமும் நிச்சயமாக இனங்காணப்பட முடியாதிருந்தது.

**3.1.3 தீயணைப்புச் சேவைத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு கோல உடைகளையும் காலணிகளையும் கொள்வனவு செய்தல்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 சனவரி 11 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க உடன்படிக்கைப் பிரகாரம் 04 வகைப் பொருட்களை ரூபா 788,451 க்கு வழங்குவதற்கு உடன்பட்டிருந்தபோதும், 2016 ஒக்டோபர் 21 ஆந் திகதியளவிலும் அவற்றை வழங்கியிராமையால் திணைக்கள உத்தியோகத்தர்களது கோல உடைகளுக்கான தேவை பூர்த்தி செய்யப்படாதிருந்தது.

(ஆ) வழங்குதலானது முறையாக மேற்கொள்ளப்படத் தவறுமிடத்து செயலாற்றல் பிணை முறியின் மூலம் அதனை ஈடுசெய்திருக்க முடியுமாயினும், வழங்குனர் சமர்ப்பித்த 06/2016 ஆம் இலக்க செயலாற்றல் பிணை முறி 2016 யூலை 08 ஆந் திகதியளவில் காலாவதியாகியிருந்தது.

(இ) 2015 ஒக்டோபர் 19 ஆந் திகதிய தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினது அறிக்கையின் பிரகாரம் அதிக கூறு விலையைச் சமர்ப்பித்த வழங்குனருக்கு கொடுப்பனவை வழங்குவதற்கான சிபார்சு வழங்கப்பட்டிருந்தபோதும், இரண்டாவது கூறு விலை நிராகரிக்கப்பட்டமைக்குத் தகுந்த காரணம் அளிக்கப்படவில்லை. ஓராண்டிற்குப் பயன்படுத்தக்கூடிய எதிர்பார்ப்புடன் மேற்கொள்ளப்பட்ட இக்கொள்வனவுக்கு கூடிய கூறு விலையைச் சமர்ப்பித்த வழங்குனர் தெரிவு செய்யப்பட்டமையால் ரூபா 552,720 அதிகளவில் செலவு செய்ய வேண்டியேற்பட்டது.

**3.1.4 குறைந்த வருவாயைப் பெறும் குடும்ப மகளிர்க்கு தையல் இயந்திரத்தை வழங்குதல்**

---

2016 ஆம் ஆண்டின்போது குறைந்த வருவாயைப் பெறும் குடும்ப மகளிரை ஊக்குவிப்பதற்காக ரூபா 29,672,810 பெறுமதியான 1218 தையல் இயந்திரங்கள் தெரிவு செய்யப்பட்ட மகளிருக்கிடையே வழங்கப்பட்டிருந்தன. தெரிவுச் செவ்வைகளின்படி 39 தையல் இயந்திரங்கள் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

(அ) தெரிவு செய்யப்பட்ட 39 பேர்களுக்கிடையே 06 பேர் மாத்திரமே தையல் கற்கை நெறிகளை பயின்றிருந்தனர்.

(ஆ) தையல் துறையில் 07 பேர் மாத்திரமே ஈடுபட்டிருந்தனர்.

(இ) தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்ட பெறுநர்கள் தொடர்பாக தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

**3.1.5 பிரதித் தலைமைச் சுகாதார மருத்துவ உத்தியோகத்தரை நியமித்தல் (நுண்ணுயிர் மற்றும் இரசாயன சேவை)**

1986 ஆம் ஆண்டின்போது சோவியத் சோசலிசக் குடியரசில் மருத்துவ பட்டப்படிப்பை பயின்றிருந்த பட்டதாரி ஒருவருக்கு 1965 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் இலங்கை மருத்துவர் ஒருவராக அமைவதற்கான தகுதி இல்லாதபோதும், உள்ளூராட்சி சேவைகள் ஆணைக்குழு கொழும்பு மாநகர மருத்துவப் பயிலுனர் பதவியை 1989 யூலை 31 ஆந் திகதி அவருக்கு வழங்கியிருந்தது. அவர் 1989 செப்டெம்பர் 08 தொடக்கம் உள்ளூராட்சி சேவையில் II ஆந் தரத்திலான மருத்துவ உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டிருந்தார். மேல் மாகாண மருத்துவ உத்தியோகத்தர்களது பிரமாணக் குறிப்பின் பிரகாரம், பிரதி மாநகர மருத்துவ உத்தியோகத்தர் (நுண்ணுயிர்) பதவிக்கு இருக்க வேண்டிய பட்டப்பின் படிப்பு டிப்ளோமா இல்லாதிருக்கையில் மாகாண உள்ளூராட்சி சேவைகள் ஆணைக்குழு அம்மருத்துவ உத்தியோகத்தருக்கு விசேட மருத்துவ உத்தியோகத்தர் பதவியை (பிரதித் தலைமைச் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் - நுண்ணுயிர் மற்றும் இரசாயன சேவை) 2005 ஏப்ரல் 29 முதல் வழங்கியிருந்தது.

**3.1.6 உத்தியோகபூர்வ மனைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாநகரசபையினது சகல உத்தியோகபூர்வ மனைகள் தொடர்பான கோவையும் எதிர்பார்ப்புப் பதிவேடும் மாநகர சபையால் ஒருமுகப்படுத்தப்பட்டுப் பேணப்படவில்லை.

(ஆ) மாநகர சபையின் உத்தியோகபூர்வ மனைகளை ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் ஒதுக்கீடு செய்வதற்கான திணைக்களத் தலைவர்களது தகவல்கள் கணக்காய்வில் புலனாகாதபோதும், திணைக்களத் தலைவர்கள் உத்தியோகபூர்வ மனைகளை ஒதுக்கீடு செய்திருந்தனர்.

(இ) கொழும்பு மாநகரசபையின் பல்வேறு திணைக்களங்களையும் சேர்ந்த அநேக உத்தியோகபூர்வ மனைகளில் சட்டபூர்வ உரித்தற்ற நபரகள் ஏற்ககுறைய 10 ஆண்டுகளாக அத்துமீறியவாறு குடியிருப்பது தெரிய வந்தது.

(ஈ) கொழும்பு மாநகர சபையினது 09 உத்தியோகபூர்வ மனைகளில் எவருமே குடியேறாதிருந்தனர்.

(உ) ஒவ்வொரு திணைக்களத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ மனைகளில் வேறு திணைக்களங்களில் பணி புரியும் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் குடியிருந்ததுடன், இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களும் தொடர்ந்து அவற்றில் வசித்து வரும் சந்தர்ப்பங்கள் நிலவின.

**3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

(அ) கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான ரூபா 26,624,000 பெறுமதியான 2 வாகனங்கள் 2016 யூலை 01 முதல் 2017 ஒக்டோபர் 30 வரை ஓராண்டு காலத்திற்கு அதிகமாக எதுவித பாவனையுமின்றி மாநகர பிதாவின் உத்தியோகபூர்வ வளாகத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஒரு டிப்பர், ஒரு டிறக்கடர், 03 டிறெய்லர்கள் என்பன நெடுங்காலமாகப் பயன்படுத்தப்படாது அலுவலக வளாகத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்தன.

(இ) பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் முடிவடையாத காலத்திலிருந்தே தொழிற்சாலை வளாகத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்த 49 செயலற்ற வாகனங்கள் இருப்பது

அவதானிக்கப்பட்டதுடன், அவற்றுள் 14 கார்பேஜ் பிரெஸ் பெக், 13 டிறக்டர்கள், 01 புல்டோசர், 02 பெகோ லோடர்கள், 01 ஜேசீபீ, 05 டிப்பர்கள், 02 லொறிகள், 01 கார், 01 வேன், 01 கிறூ கெப் என்பன இருந்தன.

## 3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

### 3.3.1 தீயணைப்புக்குப் பயன்படுத்தப்படும் போம் இயந்திரம்

2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஒக்டோபர் 20 வரையான காலப்பகுதியின் போது ஏறக்குறைய 4200 லீட்டர் போம் இழப்பிற்குள்ளாகியிருந்தது. போதிய களஞ்சிய வசதியின்மை, பெரல்களில் முறைப்படி நிரப்பாமை, பெரல்களைத் திறந்த வெளியில் வைத்திருத்தல் மூலம் அவை வெடிப்புக்கு உள்ளாகுதல் போன்றன இதற்கான காரணங்களாகும். இதற்கமைய, மேற்படி காலப்பகுதியின்போது உள்ளவாறு பயன்படுத்தப்பட்ட அளவை விட இழப்பிற்குள்ளான அளவே அதிகமாகும் என அவதானிக்கப்பட்டது.

### 3.3.2 கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான காணிகள், கட்டிடங்கள், சொத்துக்கள் என்பவற்றை நிர்வகித்தல்

**(அ) கறுவாக்காடு, பான்ஸ் பிளேஸ், 43 ஆம் இலக்க தீர்வைக்குரிய காணி**

தீர்வை வரி செலுத்தப்படாததால் கறுவாக்காடு, பான்ஸ் பிளேஸ், 43 ஆம் இலக்கத் தீர்வை வரி முகவரியில் உள்ள 154.43 பேர்ச்சஸ் காணியை 1974 ஆம் ஆண்டில் மாநகரசபை சுவீகரித்திருந்தது. 2017 டிசெம்பர் மாதமளவிலும் அக்காணியினது உரித்தை தனதாக்கிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மாநகரசபை மேற்கொண்டிருக்கவில்லை.

**(ஆ) கொழும்பு 05, ஹெவ்லொக் வீதியில் உள்ள 149/5 ஆம் இலக்க வாடகைக் கொடுப்பனவுச் சொத்து**

கொழும்பு மாநகரசபைக்குச் சொந்தமான கொழும்பு 05, ஹெவ்லொக் வீதியிலுள்ள 149/5 ஆம் இலக்க 06 பேர்ச்சஸ் காணி 1986 யூன் 17 தொடக்கம் 2016 யூன் 14 வரை 30 ஆண்டு காலத்திற்கு மாதாந்தம் ரூபா 700 வீதப்படி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இக்காணியில் மூன்று மாடிக் கட்டிடத்தை அமைத்து மாநகரசபையின் அங்கீகாரமின்றி 03 வியாபார நிலையங்களுக்கு உப குத்தகைக்கு அவை வழங்கப்பட்டிருந்தன. எனினும், அதிக வணிகப் பெறுமதியுள்ள இக்காணியை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) தனியார் மலர்ச்சாலையை நிர்மாணித்தல்**

கொழும்பு பொரளை தனியார் மலர்ச்சாலை மற்றும் மயானப் பொறுப்பாளரது உத்தியோகபூர்வ மனை என்பவற்றுக்கிடையே மாநகர சபைக்குரிய காணியில் தனியார் நிறுவனம் ஒன்று அத்துமீறியவாறு இரு மாடிக் கட்டிடத்தை மரணச் சடங்குகளுக்கான மலர்ச்சாலையாக நிர்மாணித்திருந்தது. அத்துமீறிய அந்நிர்மாணத்துக்கெதிராக மாநகர சபை நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை.

**(ஈ) வீடமைப்புத் தொகுதி**

கொழும்பு மாநகர சபையால் நிர்வகிக்கப்படும் 19 வீடமைப்புத் தொகுதிகளில் 828 கூறுகளைக் கொண்ட வீடுகள் உள்ளன. இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இவ்வீடமைப்பு தொகுதிகளில் குடியிருப்போரிடமிருந்து பெயரளவு வாடகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. தற்போதைய சந்தைப் பெறுமதிப்படி நியாயமான வணிக வாடகையை அறவிடுவதற்கு மாநகரசபை நடவடிக்கை எடுக்கவில்லை.

(ii) வீடமைப்பு தொகுதியிலுள்ள சில வீடுகள் 37 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வாடகையின் அடிப்படையில் பெறப்பட்டிருந்ததுடன், குடியிருப்பாளர் வசிப்பதற்குத் தகுந்தவாறு அவற்றை பழுதுபார்த்து அல்லது நியாயமான வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகளை மாநகரசபை மேற்கொள்ளவில்லை. அவ்வாறே, அவ்வீடமைப்புத் தொகுதிகளது கீழ் மாடியின் இரு பக்கங்களிலும் அத்துமீறிய குடியேற்றவாசிகள் இருந்ததுடன், அதனை மாநகரசபை அறிந்திருக்கவும் இல்லை.

(iii) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒவ்வொரு வீடமைப்புத் தொகுதியிலிருந்தும் மாநகரசபை அறவிட வேண்டிய வாடகை வருவாய் நிலுவை ரூபா 3,177,806 ஆகும். வாடகை வருவாய் நிலுவையை அறிவிடுவதற்கும் அவ்வாறு நிலுவை ஏற்படுவதைத் தவிர்க்கவும் முறையான விதிமுறைகளைத் தயாரிப்பதற்கு கொழும்பு மாநகரசபை தவறியிருந்தது.

**(உ) விளையாட்டு மைதானத்தை வாடகைக் கொள்வனவு அடிப்படையில் வழங்குதல்**

**(i) ஹெவ்லொக் விளையாட்டு மைதானம்**

(i) ஹெவ்லொக் விளையாட்டுக் கழகம் ஹெவ்லொக் விளையாட்டு மைதானத்தின் 04 ஏக்கர், 01 றூட், 25.1 பேர்ச் காணியை வாடகைக் கொள்வனவு அடிப்படையில் பெற்றிருந்தது. 2009 சனவரி 23 ஆந் திகதி மாநகரசபையின் விலை மதிப்பீட்டாளர்கள் மேற்கொண்ட மெய்மையாய்வின்போது காணியின் அளவு 03 ஏக்கர், 03 றூட், 35.8 ஆகக் காட்டப்பட்டு மூல உடன்படிக்கையில் உள்ளதற்கு குறைவாக 69.3 பர்ச்சர்ஸ் குறைந்திருந்தமை தொடர்பாக பரிசீலனை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. விளையாட்டு மைதானத்தின் உள்ளே பிரசார விளம்பரங்கள் பொருத்தப்பட்டு பெருமளவு வருவாய் சம்பாதிக்கப்படுவதுடன், அங்கத்தவர்களுக்கான மதுபானச் சாலையும் நடைபெற்றவாறிருந்தது. கூடிய வணிகப் பெறுமதியை உடைய இக்காணிக்கான சரியான விலை மதிப்பைப் பெற்று வருவாயைச் சம்பாதிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**(ii) BRC விளையாட்டு மைதானம்**

நெடுங்கால வாடகை கொள்வனவு வசதி அடிப்படையில் 04 ஏக்கர், 02 றூட், 13.83 பேர்ச்சஸ் காணி வழங்கப்பட்டிருந்தது. விளையாட்டு மைதானத்தில் தனியார் நிறுவனங்களது அறிவித்தல் பலகைகள் விளம்பரத்துக்கு அமைக்கப்பட்டு மதுபான விற்பனை சாலையும் உடற்பயிற்சி அபிவிருத்தி நிலையமும் 04 மாடிக் கட்டிடத்தில் இயங்குவது தெரிய வந்தது. 2006 சனவரி 01 முதல் அமுலாகும் பொருட்டு குறித்த விளையாட்டுக் கழகத்திடமிருந்து மாதாந்தம் ரூபா 75,000 வாடகைப்படி (வரி இல்லாது) அறவிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. பெருமளவு வருமானம் ஈட்டக்கூடிய சொத்து தனியார்களுக்குக் குறைந்த வாடகையில் வழங்கப்பட்டிருந்தது.

**(iii) கோல்டன் விளையாட்டு மைதானம்**

கொழும்பு கோல்டன் விளையாட்டுக் கழகத்திற்கு 07 ஏக்கர், 03 றூட், 26.7 பேர்ச்சஸ் காணி நெடுங்காலக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தபோதும், 2009 சனவரி 23 ஆந் திகதியன்று மாநகரசபை விலை மதிப்பீட்டாளர் சமர்ப்பித்திருந்த அறிக்கையின் பிரகாரம் அக்காணி 05 ஏக்கர், 02 றூட், 4.54 பேர்ச்சஸ் அளவுடையாதாக இருந்தது. இதற்கமைய, ஏறக்குறைய 02 ஏக்கர், 01 றூட்,22.16 பேர்ச்சஸ் குறைவடைந்தமை தொடர்பாக நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2006 சனவரி 01 முதல் அமுலாகும் விதத்திலும் 05 ஆண்டுகளில் குறித்த வாடகைக் கொள்வனவுத் தவணைப்பணம் மீளாய்வு செய்யப்படும் விதத்தில் மாதாந்தம் ரூபா 90,000 (வரி இன்றி) அறவிடுவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.4 இனங்காணப்பட்ட இழப்புக்கள்**

மாவட்ட 2B அலுவலக களஞ்சியத்திலுள்ள கையிருப்பைப் பரிசீலனை செய்கையில் ரூபா 36,000 பெறுமதியான 115 லீட்டர் மை காலாவதியாகி இருப்பது அவதானிக்கப்பட்டது.

**3.5 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

(அ) 2009 ஏப்ரல் 27 ஆந் திகதிய உயர் நீதிமன்றத் தீர்ப்பு இலக்கம் SC/FR/218/09 இன் பிரகாரம் மீத்தோட்டமுல்ல பிரதேசத்தில் உள்ள 02 ஏக்கர் காணியில் தற்காலிகமாகக் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எனினும் 20 ஏக்கர் வரையிலான காணியில் முறையற்றவாறு கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்டிருந்தன. அவ்வாறே, கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான காணியை மாநகரசபை கொள்வனவு செய்து கழிவுப் பொருட்களை சுழற்சிக்கு உட்படுத்துவதற்கான நெடுங்காலத் திட்டத்தை மாநகரசபை தயாரிக்கவில்லை. தற்சமயம் முத்துராஜவல பிரதேசத்தில் தற்காலிகமாக கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்ட போதும் பொதுமக்களது எதிர்ப்பு காரணமாக உயர்நீதிமன்றத்தில் புகார் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கழிவுப் பொருட் கூட நடவடிக்கைகளுக்குத் தேவையான புல்டோசர் மற்றும் எக்ஸ்கலேட்டர் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கு 2012, 2014, 2016 ஆம் ஆண்டுகளின் வருடாந்த வரவு, செலவு திட்டத்தின் மூலம் ரூபா 81,000,000 கூட்டுத் தொகை நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும், அவ்வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், எக்ஸ்கலேட்டரையும் புல்டோசரையும் வாடகைக்குப் பெற்று 2010 முதல் 2016 வரை ரூபா 680,656,697 வாடகைக் கொடுப்பனவும் செய்யப்பட்டிருந்ததும் அவதானிக்கப்பட்டது. 2015 ஏப்ரல் 30 ஆந் திகதிய 2117 ஆம் இலக்கச் சபை தீர்மானத்தின் பிரகாரம் சபைக்குரிய புல்டோசரையும் லோடர் வாகனத்தையும் விரைந்து பழுதுபார்த்து கழிவுப் பொருள் பிரிவில் அதனைப் பயன்படுத்துவதற்கும் இனிமேல் வெளியிலிருந்து அவற்றை வாடகைக்குப் பெறலாகது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், புல்டோசரும் லோடர் வாகனமும் 2016 ஆம் ஆண்டில் பழுதுபார்க்கப்படுவதற்காகத் தனியார் கம்பனி ஒன்றிடம் அனுப்பிவைக்கப்பட்டு 2007 மே மாதமளிவிலும் அதனைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(இ) திண்மக் கழிவு சுத்திகரிப்பு பிரிவில் போதியளவு வாகனங்கள் இருந்தபோதும், கழிவுப்பொருட்களை கொண்டு செல்வதற்கு அவசரக் கொள்வனவுகளுக்கான அறிவுறுத்துறைகளின் பிரகாரம் 06 டிப்பர் வண்டிகள் தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்து வாடகைக்குப் பெறப்பட்டு ரூபா 59,628,833 தொகை 2015 யூன் முதல் 2017 மே 12 வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) கேள்விகளைக் கோராது 2016 செப்டம்பர் 06 ஆந் திகதிய 178 ஆம் இலக்கச் சபை தீர்மானத்தின் மூலம் புதிய சபை தெரிவு செய்யப்படும் வரை ஒரே கம்பனியிடமிருந்து இற்றை வரை வாடகைக்கு வாகனங்கள் பெறப்பட்டிருந்தன.

(உ) திண்மக் கழிவுப் பிரிவின் மாநகர சபைப் பொறியியலாளர் 07 சந்தர்ப்பங்களில் திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம் சம்பந்தமாகப் பயிற்சி பெற்றிருந்தபோதும், பெற்ற வெளிநாட்டு பயிற்சியைப் பயன்படுத்தி கழிவுப்பொருள் மீள்சுழற்சி நடவடிக்கை போன்ற நெடுங்காலத் திட்டங்களைத் தயாரிப்பதில் பயிற்சியைப் பயன்படுத்தியிருக்கவில்லை.

**3.6 மீதோட்டமுல்லை கழிவுப்பொருள் கூடத்தின் காரணமாக பாதிப்புக்குள்ளான பொதுமக்களுக்கு இழப்பீடு வழங்குதல்**

---

(அ) கழிவுப் பொருள் கூடத்தின் காரணமாக பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குதல் 2012 ஆம் ஆண்டு ஒக்டோபரில் ஆரம்பமாகியிருந்தது. இற்றைவரை 8 கட்டங்களின் கீழ் ரூபா 605,914,020 இழப்பீடு வழங்கப்பட்டிருந்தபோதும், இது தொடர்பாக மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 188 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொலொன்னாவ கழிவுப் பொருள் கூடத்தை அண்மித்த பிரதேசத்தில் கழிவுப் பொருட்கள் அகற்றப்படுவதால் பாதிப்புக்குள்ளான பொதுமக்களின் பொருட்டு 2012 ஆம் ஆண்டின்போது ரூபா 237 மில்லியன் செலவில் மாநகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான சாலமுல்ல வீடமைப்பு செயற்திட்டத்தின் மூலம் 158 வீடுகள் வழங்கப்பட்டிருந்தன. இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பாதிப்புக்குள்ளானோர் இங்கு குடியமர்த்தப்பட்டமை தொடர்பாக கொலொன்னாவ பிரதேச செயலாளரும் கொலொன்னாவ நகர சபையும் 02 மெய்மையாய்வுகளை நடாத்தியிருந்தன. இவை இரண்டிற்குமிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(ii) வீடுகளை வழங்குவதற்கு முன்னர் கொழும்பு மாநகரசபை அவ்விடத்தில் பரிசீலனைகளை மேற்கொண்டு நிரந்தர வதிவிடத்தினரை இனங்கண்டிருக்கவில்லை.

(iii) இந்நபர்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பான இழப்பீட்டைத் தீர்மானிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமையால் இழப்பீட்டைத் தீர்மானிக்கையில் பாதிப்புக்குள்ளான அத்துமீறிய குடியேற்ற வாசிகளை அழைத்து அக்கூட்டத்தின்போது மேற்கொண்ட தீர்மானத்தின் அடிப்படையில் இழப்பீடு அமைந்திருந்தது.

(iv) இழப்பீட்டுத் தொகையை வழங்குவதில் குறித்த நபர்கள் அங்கு நெடுங்காலமாக வசிக்கும் குடியிருப்பாளர்களாக இருப்பவர்கள் என்பதனை உறுதி செய்வதற்கான ஆவணங்களைப் பெற வேண்டியபோதும், கொழும்பு மாநகரசபை தயாரித்த ''பாதிக்கப்பட்ட வீடுகள் மற்றும் குடும்ப விபரம்'' எனும் பத்திரத்தின் மூலம் பெற்ற தகவல்களின் அடிப்படையில் நிரந்தர குடியிருப்பாளர்களாக நெடுங்காலமாக வசித்தவர்கள் எனும் போதிய தகவல்கள் சரிவரச் சேகரிக்கப்படவில்லை.

(இ) உடன்படிக்கைப் பிரகாரம், இழப்பீட்டைப் பெறுபவர்கள் ஒரு மாதத்தினுள் வீட்டைத் தகர்த்து அப்புறப்படுத்த வேண்டுமாயினும், 6 ஆம் கட்டத்தின் கீழ் பாதிப்புக்குள்ளான இருவர் ரூபா 10 இலட்சம் வீதமும், 7 ஆம் கட்டத்தின் கீழ் ஒரு பாதிப்புக்குள்ளானவருக்கு ரூபா 10 இலட்சம் வீதமும், 8 ஆம் கட்டத்தின் கீழ் பாதிப்புக்குள்ளான 20 பேருக்கு ரூபா 10 இலட்சம் வீதமும் பெற்றிருந்தபோதும்,

அவர்கள் அவ்வீடுகளிலிருந்து அகன்று செல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, மேற்படி சகல இழப்பீட்டு வழங்கல் கட்டங்களிலும் இழப்பீட்டைக் கோரி முன்வராத அவ்வீடுகளிடையே வசித்து வந்த பாதிப்புக்குள்ளான பெரும்பாலானோர் இழப்பீட்டைப் பெறத் தகுதியுள்ளவர்களாக இருந்தும் அதற்கு முன்வராததால் அவர்களை அழைத்து அவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவாறான தீர்ப்பை மாநகரசபை வழங்கியிருக்குமாயின் 2017 ஏப்ரல் 14 ஆந் திகதிய அனர்த்தத்தை ஓரளவு குறைத்திருக்க முடியும்.

(ஈ) சனத்தொகை மதிப்பு புள்ளவிபரத் திணைக்களத்தினது அறிக்கையின் பிரகாரம் மீதோட்டமுல்லவில் உள்ள கழிவுப்பொருள் கூடம் சரிந்து வீழ்ந்தமையால் பின்வருமாறு இழப்புகள் ஏற்பட்டிருந்தன.

- மரணமடைந்தோர் எண்ணிக்கை 32
- பாதிப்புக்குள்ளானோர் 1059
- பாதிப்புக்குள்ளான குடும்பங்கள் 246
- காயமடைந்தோர் 11
- காணாமல் போனவர்கள் 08
- முற்றாக சேதமடைந்த வீடுகள் 80
- அரைவாசி சேதமடைந்த வீடுகள் 17

(உ) 2016 யூன் 05 ஆந் திகதிய ஞாயிறு லங்காதீப புதினப் பத்திரிகை "கொலொன்னாவ, மீதோட்டமுல்ல கழிவுப் பொருட்கள் மலை போன்று இருக்கும் பிரதேசத்தில் வெகு விரைவில் அரநாயக்க மண்சரிவு போன்ற பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம் என விஞ்ஞானபூர்வமாக உறுதி செய்யப்பட்டுள்ளது எனப் பேராதனை பல்கலைக்கழகத்தின் சுற்றாடல் பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் அறிவித்திருந்தார். மீதோட்டமுல்ல கழிவுப் பொருட்கள் மலை போன்ற உயரத்தின் அடிப்படையிலும் அப்பிரதேசத்தில் அமைந்துள்ள அழகிய சுற்றாடலிலும் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் அடிப்படையிலும் இவ்வாறு அறிவிக்கப்பட்டிருந்தது. நாட்டின் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழக விரிவுரையாளரின் கூற்று தொடர்பாக, (கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பில்) முறைப்படி நடவடிக்கை எடுத்திருப்பின் பத்து மாதத்தின் பின்னர் நிகழந்த அனர்த்தத்தை தவிர்த்துக் கொள்ள ஏதுவாக இருந்திருக்கும்.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பொருட்டு சபையின் வருவாயும் செலவினமும் முறையாக மதிப்பீடு செய்யப்படாமையால் கீழே குறிப்பிட்டவாறு மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருவாய்/ செலவினம் என்பவற்றுக்கிடையே 11 முதல் 603 சதவீதம் வரையிலான வேறபாடுகள் அவதானிக்கப்பட்டன. இதனால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. விபரம் வருமாறு.

(அ) வருமான விடயங்கள் நான்கின் மூலம் ரூபா 670.5 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டு 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4.6 மில்லியன் உள்ளவாறு அறவிடப்பட்டபோதும் அறவிடப்படாதிருந்த சதவீதம் 93.9 முதல் 99.9 வரையிலான அதிகளவிலிருந்தது.

(ஆ) வருமான விடயங்கள் பதின்மூன்றில் ரூபா 1,143.5 வருவாய் மதிப்பீடு செய்யப்பட்ட போதும் அறவிடப்பட்டது 22.4 சதவீதமான ரூபா 756.2 மில்லியனாகும்.

(இ) வருவாய் விடயங்கள் ஒன்பதின் பாதீடு செய்யப்பட்ட வருவாய் ரூபா 168.7 ஆகும். உள்ளவாறான அறவீடு ரூபா 311.4 மில்லியன் ஆகும். நிதி ஏற்பாட்டிலும் கூடிய வருவாய் 38.9 முதல் 603.1 சதவீதம் வரையினதாக இருந்தது.

(ஈ) 2016 ஆம் ஆண்டினது 16 செலவின விடயங்களுக்கு மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 217.9 மில்லியன் ஆகும். மீளாய்வாண்டு முடிவிலும் செலவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

(உ) பத்துச் செலவின விடயங்களுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 880.9 மில்லியனாகும். உள்ளவாறான செலவினம் ரூபா 58.5 மில்லியனாகும். இதனால் செலவிடப்படாத சதவீதம் 86 முதல் 99.4 சதவீதம் வரையிலான அதிகளவாக இருந்தது.

(ஊ) ஏழு செலவின விடயங்களது பாதீடு செய்யப்பட்ட செலவினம் ரூபா 1007 மில்லியன் ஆகும். உள்ளவாறான செலவினம் ரூபா 1629.6 மில்லியனாகும். நிதியேற்பாட்டிலும் கூடுதலான செலவுகளின் சதவீதம் 11 முதல் 357 சதவீதம் வரையில் அமைந்திருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது மாநகர ஆணையாளரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படாமை. |
| | (ii) பதிவேடு முறையாகப் பேணப்படாமை. |
| (ஆ) வருவாய் நிர்வாகம் | (i) வருவாய் நிலுவை சரியாகச் சேகரிக்கப்படாமை. |
| | (ii) வரி மதிப்பீடு குறித்த காலத்தில் மேற்கொள்ளப்படாமை. |
| (இ) களஞ்சியக் கட்டுப்பாடு | (i) பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் முறைப்படி நடவாமை. |
| | (ii) முன்னர் நடைபெற்ற மெய்மையாய்வு நடவடிக்கைகளின்போது சகல களஞ்சியப் பொருட்களும் மெய்மையாய்வு செய்யப்படாமை |
| (ஈ) சொத்துப் பாவனை | அதிக விலையுடைய வாகனங்களைப் பயன்படுத்தாது தரித்து வைத்தமை |